தடம்
யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி 2015 THADAM
J/CHAVAKACHCHERI HINDU COLLEGE CHAVAKACHCHERI Aug- Des VOLUME 8 ISSUE 3

## ஆசிரியர் தினமும் சிறுவர் தினமும்



எமது கல்லூரி ஆசிரியர் தினமும் சிறுவர் தினமும் 10.10.2015 (சனிக்கிழமை) அன்று கல்லூரியின் பிரதான மண்டபத்தில் பாடசாலைப் பழைய மாணவர் சங்கச் செயலாளர் திரு.யோ.ஜெயக்குமார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கல்லூரிப் பழைய மாணவர் சங்கமும் கல்லூரி மாணவ முதல்வர்களும் இணைந்து ஒழுங்கு செய்திருந்த இவ்விழாவுக்கு தென்மராட்சிக் கல்வி வலயத்தின் முன்னாள் கோட்டக் கல்வி அதிகாரி திரு.கு.சிவானந்தம் அவர்கள் பிரதம விருந்தினராகவும் சிறப்பு விருந்தினராக எமது கல்லூரியின் ஓய்வு நிலை அதிபர் திரு.சி.த. இரத்தினம் அவர்களும் கலந்து சிறப்பித்தனர். அதிபர் ஆசிரியர்கள் மாணவர்களால் மாலை சூட்டப்பட்டு மேடைக்கு அழைத்து வரப்பட்டனர் ஆசிரியர் கீதம் இசைக்கப்பட்டு தொடர்ந்து எமது கல்லூரி சித்திர பாட ஆசிரியர் செ.செல்வரமணனால் உருவாக்கப்பட்ட அன்பாசான் இசைப்பாடலும் இசைக்க விடப்பட்டது. மாணவச் செல்வங்களின் வரவேற்பு நடனம், பாடல்கள், பேச்சு, கணித, சமூக நாடகங்களோடு மேற்கத்தேய வாத்திய இசை நிகழ்வும் இடம்பெற்றன. ஆசிரியர்களின் சார்பில் இசைப்பாடல்களும் சிறப்பாக இடம்பெற்றன. 2015 ஆம் ஆண்டு ஓய்வு பெறவுள்ள கல்லூரியின் பிரதி அதிபர் திரு.ந.பாலச்சந்திரன் அவர்கட்கு சிறப்புச் சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டதோடு ஏனைய ஆசிரியர்கள் அனைவருக்கும் பழைய மாணவர் சங்கம் நினைவுப் பரிசில்களையும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். முதன்மை விருந்தினர் அவர்கள் தமது உரையிலே மாணவர்களுக்காக தம் முயிரையும் பொருட்படுத்தாமல் சேவையாற்று கின்ற அதிபர், ஆசிரியர்கள் இன்னும் எம் மத்தியில் வாழ்ந்து கொண்டுதான் இருக்கின்றார்கள் எனக் குறிப்பிட்டுள்ளார்.




சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு 01.10.2015 அன்று அங்கர் கம்பனியால் அங்கர் நியூடே பக்கற்றுக்கள் அனைத்து மாணவர்களுக்கும் வழங்கிக் கௌவிக்கப்பட்டு மகிழ்விக்கப்பட்டது.

## சின்னஞ் சூட்டும் நிகழ்வும்

எமது கல்லூரி மாணவ முதல்வர்களைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் கடந்த 23.09.2015 அன்று இடம்பெற்று 25.09.2015 அதிபர் தலைமையில் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் சின்னஞ்சூட்டும் நிகழ்வும் இடம்பெற்றது. புதிய மாணவர் தலைவர்களாகத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கும் மாணவிகளுக்கும் சின்னஞ் சூட்டப்பட்டது. சிரேஷ்ட மாணவ தலைவனாக க.பிரியங்கனும் சிரேஷ்ட மாணவ தலைவியாக ச.வானதியும் தெரிவு செய்யப்பட்டனர்.

## அன்பாசான் வெளியீடு

எமது கல்லூரி சித்திரபாட ஆசிரியர் செ.செல்வரமணன் அவர்களால் ஆக்கப்பட்ட அன்பாசான் என்ற ஆசிரியர் புகழ்மாலை இறுவட்டு வெளியீடானது தென்மராட்சிக் கல்வி வலயத்தால் 06.10.2015 (செவ்வாய்க்கிழமை) பி.ப 4.00 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது. தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திரு.சு.கிருஷ்ணகுமார் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு வடக்கு மாகாணம் கௌரவ அமைச்சர் த.குருகுலராசா அவர்களும் சிறப்பு விருந்தினராக மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர், வடக்கு மாகாணம் திரு.முத்து. இராதாகிருஷ்ணன் அவர்களும் கௌரவ விருந்திரனாக முன்னாள் மாகாணக் கல்விப் பணிப்பாளர் வடக்கு மாகாணம் திரு.ப.விக்கினேஸ்வரன் அவர்களும் கலந்து சிறப்பித்தனர். பிரதம விருந்தினர் இறுவட்டினை வெளியிட்டு வைக்க பாட்டுக்கு மெட்டமைத்த சங்கீத வித்துவான் பொன்.ஸ்ரீவாமதேவன் அவர்கள் வெளியீட்டுரையினை நிகழ்த்தினார். ஆசிரியர் செ.செல்வரமணனின் பாடல்வரிகளுக்கு திரு.ஜே.மதுசிகன் பாட கல்லூரி ஆசிரியை ஜே.கஜேந்திராவும் மாணவிகள் செல்வி.கே. கஜனியும், எஸ்.சாகராவும் உடன் பாடிப் பாடலுக்கு



மேலும் இனிமை சேர்த்துள்ளனர்.

## சேவை நயப்பும் பிரிவுபசார வைபவமும்

எமது கல்லூரியில் 15.10.1989 - 14.10.2015 (26 வருடங்கள்) வரை புவியியல் பாட ஆசிரியராகவும், பாட இணைப்பாளராகவும், பகுதித் தலைவராகவும், பிரதி அதிபராகவும் பணியாற்றிய திரு.ந.பாலச்சந்திரன் அவர்கள் தனது அறுபதாவது அகவையில் சேவையிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார். பிரதி அதிபர் அவர்களின் சேவை நயப்பும் பிரிவுபசார வைபவமும் 14.10.2015 அன்று கல்லூரி பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது. மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் இணைந்து ஆசிரிய சகோதரத்துவத்தினால் இப்பிரிவுபசார நிகழ்வு இடம்பெற்றது. பாமாலைகள், பூமாலைகள், வாழ்த்துக்கள் என்பன பிரதி அதிபர் அவர்களின் தன்னலங்கருதாத சேவையைப் பறைசாற்றின. இருபத்தாறு வருடங்கள் எமது கல்லூரியிலே பணியாற்றி கல்லூரி உயர்வுக்காக பல வகையிலும் தன்னை அர்ப்பணித்த பெருந்தகையாளனின் ஓய்வுக்காலம் மகிழ்ச்சியாகவும், சிறந்த தேக ஆரோக்கியமும் நிறைந்து விளங்க வேண்டும் என தடம் செய்தியினூடாக இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றோம்.

## இடமாற்றம் பெற்றுச் சென்றோர்

எமது கல்லூரியின் ஆசிரியர்களான திரு.மு.அசோக்குமார், திரு.எஸ்.தினேஸ்குமார் போன்றோரும் கல்லூரியில் அபிவிருத்தி உத்தியோகத்தராக இருந்த திரு.வீ.ஜெகன்

அவர்களும் இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளனர். சென்ற இடங்களிலும் இவர்களது சேவை சிறந்து விளங்கவும் எல்லா நலன்களும் பெற்று சிறப்பாக வாழவும் வாழ்த்துகின்றோம்.

## வரவேற்கின்றோம்




எமது கல்லூரிக்கு அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக திரு.என்.பிரதாப், திரு.பி.மனோராஜ் அவர்கள் நியமிக்கப் பட்டுள்ளார்கள். உயர்தொழில்நுட்ப நிறுவனத்தில் H.N.D.A பட்டத்தினைப் பெற்ற இவர்களைக் கல்லூரிச் சமூகம் சார்பாக வரவேற்கின்றோம். இவர்களது சிறப்பான சேவை எமதுக ல்லூரியின் வளர்ச்சிக்குத் துணைபுரியும் என நம்புகின்றோம்.

## பௌதிகவள விருத்தி

மாணவர்களின் வாசிப்புப் பழக்கத்தை மேம்பாடடையச் செய்வதோடு நவீன காலத்திற்கு ஏற்ற விதத்தில் அவர்களின் தேடலையும் தேவைகளையும் நிறைவு செய்யும் முகமாக கற்றல் வள நிலையத்தின்பால் இவ்வருடம் அதிக செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. அரும் பொருட்களை உரிய முறையில் பாதுகாத்துக் காட்சிப்படுத்தும் நோக்கில் ரூ 120,000 பெறுமதியில் அலுமினியக் காட்சி அலுமாரிகள் (Aluminiom Fitting show case) உசாத்துணைப் பகுதியில் பொருத்தப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

நூல்களை மீள் ஒழுங்கமைத்து வைப்பதற்காக ரூ 113600 பெறுமதியில் 16 புத்தக இறாக்கைகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. மாணவர்களின் இணையப் பாவனையை அதிகரிக்கச் செய்ய மேலும் ஐந்து கணினிகள் பொருத்தப்பட்டு மாணவர்களின் பயன்பாட்டுக்கு ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன.

## போட்டிகள் சாதனைகள்

### புத்தாக்கப் போட்டிகள்

2015 ஆம் ஆண்டுக்கான புத்தாக்குநர் கழக தேசிய மட்டப் போட்டியில் எமது கல்லூரி மாணவன் உ.சங்கீர்த்தன் (தரம் 9) New Cocount Scraper என்ற உபகரணத்தை ஆக்கி இரண்டாம் இடத்தினைப் பெற்றுக் கொண்டார். இவருக்கான பரிசளிப்பு வைபவம் 02.12.2015 கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. எமது கல்லூரிக்குப் புகழ்சேர்த்த இம்மாணவனைப் பாராட்டுவதோடு வழிகாட்டிய ஆசிரியரையும் பாராட்டுகின்றோம்.

### 2015 ஆம் ஆண்டு வணிகக் கல்விப் போட்டி

வலய மட்டம்

குறு வினா

| | | |
|---|---|---|
| தரம் 10 | அ.கீர்த்தனன் | 1ஆம் இடம் |
| | கு.பூர்ணிமா | 1ஆம் இடம் |
| தரம் 11 | தெ.கிருசன் | 1ஆம் இடம் |





| | | |
|---|---|---|
| | ஸ்ரீ.சௌமியன் | 2ஆம் இடம் |
| தரம் 12 | ரா.நிதர்சிகா | 2ஆம் இடம் |

பேச்சு

| | | |
|---|---|---|
| தரம் 10 | த.தரணிகா | 1ஆம் இடம் |
| | த.தர்சனாங்கி | 2ஆம் இடம் |
| | அ.கீர்த்தனன் | 3ஆம் இடம் |
| தரம் 11 | ர.மதுரங்கா | 1ஆம் இடம் |
| தரம் 12 | க.சுஜிவிகா | 2ஆம் இடம் |
| | தே.டனுசிகா | 3ஆம் இடம் |

கட்டுரை

| | | |
|---|---|---|
| தரம் 10 | செ.நிருஷா | 3ஆம் இடம் |
| தரம் 12 | க.சுஜீவிகா | 3ஆம் இடம் |

### மாகாண மட்டம்

குறுவினா

தரம் 10 அ.கீர்த்தனன்2ஆம் இடம்

கு.பூர்ணிமா 3ஆம் இடம்

தரம் 11

தெ.கிருசன் 2ஆம் இடம்

போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களையும் பயிற்றுவித்த ஆசிரியர்களையும் பாராட்டுகின்றோம்.

## விஞ்ஞான வினாடி வினாப் போட்டி 2015

இவ்வருடம் நடத்தப்பட்ட வலய மட்ட விஞ்ஞான வினாடி வினாப் போட்டியில் எமது கல்லூரி மாணவர்கள் அதிகளவு இடங்களைப் பெற்றுள்ளனர்.

### விஞ்ஞானம் (தமிழ்மொழி மூலம்)

| | | |
|---|---|---|
| தரம் 7 | இ.தவினுகன் | 1ஆம் இடம் |
| | வ.டுல்சன் | 2ஆம் இடம் |
| தரம் 8 | க.யதுஷா | 1ஆம் இடம் |
| | லோ.கோவிசாந் | 2ஆம் இடம் |
| | சி.தகம்பவி | 3ஆம் இடம் |
| தரம் 9 | இ.லக்ஷாயினி | 1ஆம் இடம் |
| | த.சுந்தர்பவன் | 3ஆம் இடம் |
| தரம் 10 | அ.கீர்த்தனன் | 3ஆம் இடம் |
| தரம் 11 | தி.டினோஜன் | 1ஆம் இடம் |
| | த.அபீதன் | 2ஆம் இடம் |
| | நா.நவீன்சங்கர் | 3ஆம் இடம் |

### விஞ்ஞானம் (ஆங்கில மொழி மூலம்)

| | | |
|---|---|---|
| தரம் 6 | ஸ்ரீ.வனோஜா | 1ஆம் இடம் |
| தரம் 7 | க.சாம்பவி | 1ஆம் இடம் |
| | க.ஐங்கரன் | 3ஆம் இடம் |
| தரம் 8 | சு.லோஜிதன் | 1ஆம் இடம் |
| | ம.கோபிதன் | 3ஆம் இடம் |
| தரம் 9 | ம.பானுகா | 2ஆம் இடம் |
| | ஸ்ரீ.சைந்தவி | 3ஆம் இடம் |
| தரம் 10 | ஆ.ஷானுஜா | 3ஆம் இடம் |

இவர்களில் தரம் 9 இல் செல்வி இ.லக்ஷாயினி மாகாண மட்டப் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்டார். இம்மாணவர்களைப் பாராட்டுவதோடு பயிற்றுவித்த ஆசிரியர்களையும் பாராட்டுகின்றோம்.

## 2015 ஆம் ஆண்டு சமூக விஞ்ஞானப் போட்டி

மாகாண மட்டத்தில் தெரிவு செய்யப்பட்டவர்கள்

| | | |
|---|---|---|
| தரம் 7 | த.கீர்த்திகன் | 2ஆம் இடம் |
| தரம் 9 | த.சுந்தர்பவன் | 1ஆம் இடம் |
| | இ.லக்சாயினி | 2ஆம் இடம் |






இவர்கள் மேலும் பல சாதனைகள் படைக்க வேண்டுமென தடம் செய்தியினூடாக வாழ்த்துகின்றோம்.

## சைவநெறி, தமிழ்மொழிப் பரீட்சை - 2014

### பரிசு பெற்றோர்

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையினால் 2014 ஆம் ஆண்டு நடாததப்பபட்ட சைவநெறி, தமிழ்மொழி பரீட்சை பரிசளிப்பு விழா



19.02.2016 வெள்ளிக்கிழமை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெற்றது. எமது கல்லூரியில் சைவநெறித் தேர்வுப் பரிசில்களை தரம் 9 வகுப்பைச் சேர்ந்த செல்வி தரணிகா தனராஜ் 2ஆம் பரிசையும் செல்வி.சங்கவி சந்திரசேகரம் ஆறுதல் பரிசையும் தரம் 7 வகுப்பைச் சேர்ந்த செல்வி வைஷாலி புனிதநாதன் ஆறுதல் பரிசையும் பெற்றுக் கொண்டனர். தமிழ் மொழித் தேர்வுக்கான பரிசில் தரம் 7 வகுப்பைச் சேர்ந்த செல்வி வைஷாலி புனிதநாதன் பெற்றுக் கொண்டார். இம் மாணவர்களைப் பாராட்டுவதோடு மேலும் வெற்றி பெற வாழ்த்துகின்றோம்.

## சிநேகபூர்வ துடுப்பாட்டப் போட்டி

24.09.2015 (வியாழக்கிழமை) காலை 8.30 மணிக்கு எமது கல்லூரிக்கும் கைதடி நவீலட் பாடசாலைக்கும் இடையிலான சிநேகபூர்வ துடுப்பாட்டப் போட்டி எமது கல்லூரி மாணவர் பாராளுமன்றத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டு எமது கல்லூரி மைதானத்தில் நடாத்தப்பட்டது. இதில் எமது கல்லூரி மாணவர் அணி வெற்றி பெற்றது. கல்லூரியின் அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள் அனைவரும் கலந்து சிறப்பித்தனர்.

உலக ஆசிரியர் தினத்தை முன்னிட்டு எமது கல்லூரி ஆசிரியர்களுக்கும் கைதடி நாவற்குழிப் பிரதேசப் பாடசாலைகளில் சேவை புரியும் ஆசிரியர்களுக்கும் இடையிலான துடுப்பாட்டப் போட்டி 30.09.2015 அன்று எமது கல்லூரியின் மைதானத்தில் இடம்பெற்றது. இதில் கைதடி நாவற்குழிப் பிரதேச ஆசிரியர்களின் அணி வெற்றி பெற்றது.

## வாணி விழா

நவராத்திரியை முன்னிட்டு எமது கல்லூரி இந்துமன்றத்தினர் மிகச் சிறந்த முறையில் வாணி விழா நிகழ்வுகளைச் செய்திருந்தனர். சைவ சமய அறிவுப் போட்டியும் நடத்தப்பட்டு மாணவர்களுக்குப் பரிசும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. மாணவரின் கலை நிகழ்வுகள் இந்துமன்றப் பொறுப்பாசிரியர் திரு.ப.ஜெகசீலன் தலைமையில் சிறப்புற நடைபெற்றன.

## தடம் வெளியீடு



கல்லூரியின் 2015 ஆம் ஆண்டு இரண்டாம் தவணையில் நடைபெற்ற கல்வி மற்றும் இணைபாட விதானச் செயற்பாடுகளை உள்ளடக்கிய தடம் செய்திமடல் வெளியீடு 04.12.2015 (வெள்ளிக்கிழமை) கல்லூரி அதிபர் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலயத்தின் ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு.அ.மனோரஞ்சன் அவர்கள் கலந்து சிறப்பித்தார். இந்நிகழ்வில் முதற்பிரதியினை முதன்மை விருந்தினர் வெளியிட்டு வைத்தார்.

**செயலமர்வு**

எமது கல்லூரி மாணவர்களின் ஆளுமையை வெளிப்படுத்தும் முகமாக மனதை ஒருமுகப்படுத்தி ஒரே நேரத்தில் பல விடயங்களை அவதானித்தல் தொடர்பான செயலமர்வு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் 12.10.2015 காலை இடம்பெற்றது. இந்தியாவின் தமிழ்நாட்டிலிருநது வருகை தந்த பேராசிரியர் திரு.செழியன் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இச்செயலமர்வில் கல்லூரியின் சிரேஷ்ட இடைநிலை மாணவர்களும், சிரேஷ்ட மாணவர்களும் கலந்து பல பயன்களைப் பெற்றனர்.

**மாணவர் பாராளுமன்றம்**

மாணவர் பாராளுமன்றம் பாடசாலை நிர்வாகத்துடன் இணைந்து மாணவர்களுக்கான நலன்புரி சேவைகளை ஆற்றி ருகின்றது. மாணவர் மத்தியில் காணப்படும் தேவைகளை இனம்கண்டு அவற்றினை பாடசாலை நிர்வாகததுடன் இணைந்து செயற்படுத்தி வருகின்றது. அத்துடன் அயற் பாடசாலைகள், சமூக அமைப்புக்கள், கல்வி அலுவலகம் போன்ற பல்வேறு மட்டங்களில் தொடர்புகளை ஏற்படுத்தி சேவையை வழங்கி வருகின்றது.

குடும்பச் சூழ்நிலை காரணமாக பாடசாலைக்கு மதிய உணவு கொண்டுவராத மாணவர்களுக்கு மாணவர்களிடமிருந்து மேலதிகமாக சேகரிக்கப்பட்ட உணவுப் பொதிகளை வழங்கியமை. மாணவர்களின் நலனுக்காக காற்றுப்பம்பி பொருத்தப்பட்டமை, தரம் 6C மாணவர்களுக்கான மேலதிக கற்றல் வகுப்பு உயர்தர 12A2 மாணவர்களின் உதவியுடன் நடத்தப்பட்டது போன்ற பல செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

15.10.2015 அன்று பிரதி அதிபர் திரு.நா.பாலச்சந்திரன் அவர்களின் ஓய்வு பெறுவதை முன்னிட்டு அவரது கௌரவிப்பும் நினைவுச் சின்னம் வழங்குதலும் இடம்பெற்றது. பிரதமர் தமது தொகுப்புரையில் நிறைவேற்றிய திட்டங்கள் பற்றியும் சிறப்பாக செயற்பட்ட அமைச்சர்களுக்கு அவை சார்பாக பாராட்டினையும் தெரிவித்தார். பிற்பகல் 1.30 மணிக்கு பாராளுமன்ற அமர்வு அவைத்தலைவர் அவர்களினால் அடுத்த பாராளு மன்ற அமர்வுக்கான திகதி அறிவிக்கப்பட்டு அமர்வு நிறைவுபெற்றது.





## Provincial Level English Day Competitions- 2015

We won four places in the Provincial English day Competition. I congratulate the winners.

1. Debate- First Place

    Mas.M.Keethananth,
    Mas.B.Thinushan.
    Ms.V..Mathanika
    Ms.R.Vihani

2. Senior Poetic Drama - Second place




4. Mas.R.Thavinuhan - Creative Writing Grade 7- Third place



I am very much thankful to all those who worked hand in hand to do the performances at the English Day Competition. I also thank our Principal for his full support and guidance.

## Debate Team 2014-2015

1st place



M.Keethanath, B.Thinushan, V.Mathaniga, R.Vigani

**National Arts Literary Competition (Recitation)**

National Level -1st Place –



Ms.Makendran Keethanjalai

**Group Singing (Junior) - Third place**



# எமது நோக்கு

காலனித்துவ ஆட்சியின் போது தமது கலாசாரத்தையும் சமயத்தையும் ஏனைய இன அடையாளங்களையும் பாதுகாக்க சுதேசிகள் பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்தனர். அந்தவகையில் பிரதேசங்கள் தோறும் சுதேசிகளால் பாடசாலைகள் உருவாக்கப்பட்டன. இந்து பாரம்பரியத்தை பாதுகாப்பதற்காக சைவப்பிரகாச வித்தியாலயங்களும் இந்துக் கல்லூரிகளும் பிரதேசங்கள் தோறும் தோன்றின.

பாடசாலைகள் குறித்த சமுகத்தின் பாரம்பரியங்களை அடுத்த தலைமுறைக்கு கையளிக்கும் பிரதான சமூக நிறுவனங்களாகும். இந்தவகையில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி தென்மராட்சிப் பிரதேசத்தில் இந்துப்பாரம்பரியத்தை சமூகத்திற்கு முறையாக கையளிப்பதற்காக காலனித்துவக் காலத்தில் உருவாக்கப்பட்ட பாடசாலையாகும்.

இன்றைய இளையதலைமுறைக்கு முறையாக பாரம்பரியங்களையும் ஒழுக்க விழுமியங்களையும் கையளிப்பதில் பல்வேறு உத்திகளை பிரயோகிக்க வேண்டிய நிலை காணப்படுகிறது. அந்தவகையில் கைகூப்பி வணங்குவதில் இருந்து தியானம் செய்வது வரை மாணவர்களின் மனப்பாங்கு மற்றும் ஆன்மீக உணர்வுகளில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டியுள்ளது. எமது பாடசாலை ஆரம்பிக்கப்பட்டதற்கான அடிப்படை நோக்கமும், இளம்தலைமுறையை நல்வழிப்படுத்துவதற்கான இன்றைய தேவையும் ஒன்றாகவே காணப்படுகின்றது.

அதிபர்

♦ ஆலோசனையும் வழிகாட்டலும்:



திரு ந.சர்வேஸ்வரன்.(அதிபர்)
யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி
(தேசிய பாடசாலை)



திரு.சு.சிவானந்தன்
பிரதி அதிபர்
(நிர்வாகம்)



திரு.த.பாலசண்முகநாதன்
பிரதி அதிபர்
கல்வி அபிவிருத்தி

♦ மலர்க்குழு :

♦ ஆசிரியர்கள்



திரு.ந.அகிலன்
(தமிழ்)



திருமதி.த.கிரிதாஸ்
(ஆங்கிலம்)



♦ கணனி வடிவமைப்பு.
திரு. ஆ.வைகுந்தன்



♦ கணனிப்பதிவு:
திருமதி க.நளாயினி

அனுசரணை : திரு/திருமதி செல்வராணி செல்வராசா (ஓய்வு நிலை பிரதி அதிபர்)
தடம் வெளியீட்டு நிதியம்.

தடம்

FROM, PRINCIPAL,
J/CHAVAKACHCHERI
HINDU COLLEGE
CHAVAKACHCHERI
T.P NO. 021 2270350 /201 227 0351
Web.WWW.ChC.sch.lk

TO, ..............................................
..............................................
..............................................